என்றுமில்லா எழுச்சி!

(1946)

டாக்டர் ஜி. அதிகாரி

(மெம்பர், பொலிட் பீரோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

மொழிபெயர்ப்பு:

ஆர். எச். நாதன்

V2:51
N47

ஜனசக்தி பிரசுராலயம்

1/6, டேவிட்ஸன் தெரு :: ஜி. டி. சென்னை

ரவரி, 1947] [விலை அணா 6

Title card
V2:51'N1
N47

பதிப்புரை

....

1946-ம் வருடமானது, இந்திய மக்களின் புரட்சி சரித்திரத்தில் மிகவும் முக்கியமான அத்தியாயம் எழுதப்பட்ட வருடம் ஆகும். அந்த அத்தியாயமே இந்தச் சிறு பிரசுரம்.

அடுத்த அத்தியாயம் என்ன? அது எப்படி எழுதப்பட வேண்டும்?

—இதுதான் 1947-ம் வருடம் சுதந்திர தினத்தன்று இந்திய மக்கள் முன் நின்ற கேள்வி.

எழுச்சியுற்ற இந்தியா முச்சந்தியில் நிற்கிறது. இந்த வழியா, அந்த வழியா? என்று அதன் போக்கு இன்னும் பூரணமாக நிச்சயிக்கப்படவில்லை. "பொது மக்களின் சொந்த புரட்சி வழியில் செல்க!" என்கிறது ஒரு குரல். "வகுப்பு கலவர வழியில் செல்க!" என்கிறது விரோதியின் குரல். புரட்சி வழி வேண்டாம்; விரோதியுடன் சமரஸமாகப் போகும் வழியில் செல்க!" என்று இழுக்கின்றன நீண்ட நெடுநாளைய தலைமைகளின் குரல். ஆனால், சகோதரர்கள்மீது அந்தத் தலைமைகளின் குரல்கள் வெறுப்பு தீயைக் கக்குகின்றன. இதைப் பயன்படுத்தி விரோதி, தன் வழியில் இழுக்கிறான்!

போராட்டம் நடக்கிறது! எந்த வழி? எந்த பாதை? எந்த பக்கம்?

பொது மக்கள்தான் இறுதியில் தீர்மானிக்கப் போகிறார்கள். தங்கள் சொந்த வழியிலேயே அவர்கள் போவார்கள் என்பது உறுதி. இதற்கு உதவி செய்ய வேண்டியது தேசபக்தர்களின் கடமை.

எவ்விதம் உதவி செய்வது என்பதை—எவ்விதம் புதிய அத்தியாயத்தை எழுதுவது என்பதை—விளக்கும் இந்த அத்தியாயம் தேச பக்தர்களுக்கு இன்றியமையாதது.

சென்னை,
15-2-47

ஜனசக்தி பிரசுராலயத்தார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 - MAR 1947

என்றுமில்லா எழுச்சி!

(1946)

இந்த வருடம் நடக்கும் சுதந்திர தினத்தன்று, இரண்டாவது உலக மகாயுத்தம் நடந்த பின்பு கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக நடந்த சம்பவங்களை அலசி ஆராய்ந்து அதிலிருந்து கிடைக்கும் சில படிப்பினைகளை ஸ்பஷ்டமாக எடுத்துரைக்கும் நிலைமையிலிருக்கிறோம். ஆசியாவின் கீழ்க்கோடியிலுள்ள பல அடிமை நாடுகளில் சுதந்திர எரிமலைகள் வெடித்ததைப் பார்த்தோம். அதே போல், கடந்த வருடம் இந்தியாவிலும், ஆட்டம்கொடுத்துக்கொண்டிருக்கும் ஏகாதிபத்திய-நிலப்பிரபுத்துவ ஆட்சியைக் குழிவெட்டிப் புதைப்பதற்காக, நமது மக்கள் இதுவரையிலும் நாம் கண்டும் கேட்டுமிராத அளவு கிளர்ந்தெழுந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார்கள்.

அதே சமயத்தில் சுதந்திர இயக்கத்தை நசுக்குவதற்காக, கடந்த வருடம் ஏகாதிபத்யமும் எதிர்ப் புரட்சியைக் கட்டவிழ்த்துவிட்டிருந்தது. பல கொடிய வடிவங்களில் தாக்குதலை நடத்திற்று. சுதந்திர இயக்கத்தைச் சகோதரச் சண்டையாக மாற்றி, சுதந்திரப் போராட்டத்தைச் சகோதர சண்டையில் மூழ்கடிக்க ஏகாதிபத்யம் சூழ்ச்சி செய்தது.

ஆனால், யுத்தகாலத்தில் ஏகாதிபத்தியம் பொதுமக்களை ஈவிரக்கமின்றி சுரண்டி வந்ததால் ஏற்பட்ட மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியின் விளைவாக பாட்டாளி மக்களும், பொதுஜனங்களும், பசி பட்டினி முதலிய சகிக்கமுடியாத கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானார்கள். இவைகள் பொதுமக்களின் அரசியல் உணர்ச்சியையும், போர்க்குணத்தையும் தீட்டிக் கூராக்கின. இன்று தேசம் முழுவதும் கங்குகரையின்றி பொங்கி எழும் புரட்சிப் பிரவாகத்திற்குக் காரணமும், மேற்கூறிய நெருக்கடி

யும், அதன் விளைவாக பொதுஜனங்கள் கஷ்டப்பட்டு வருவதும்தான். பொருளாதார நெருக்கடியும், பொது ஜனங்களின் துன்பங்களும் தொடர்ந்து நீடித்து வருவது தான், பொதுஜனங்களை புரட்சிப் பாதையில் அழைத்துச் செல்கின்றன.

புரட்சி முறுக்கேறுகிறது

பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ராஜதந்திரிகள் சமாதான ரீதியில் இந்தியாவுக்கு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, இந்தியாவைவிட்டு வெளியேறப் போகிறோம் என்று பகிரங்கமாகப் பறைசாற்றுகிறார்கள். அதேசமயத்தில் அதே ஏகாதிபத்ய ராஜதந்திரிகள் திரைமறைவில் நமது சுதந்திரப் போராட்டத்தை வேரோடு கெல்லி எறிவதற்காக, ரகசிய ராணுவத் திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். திரைமறைவில் நின்றுகொண்டு, பொதுஜன ஆதரவைப் பெற்ற நமது கட்சிகளை ஒன்றோடொன்று முட்டிமோதும்படி ஏவிவிட்டு, சகோதரச் சண்டையைத் தூண்டிவிடுகிறார்கள். மற்றொருபுறத்தில், காங்கிரஸ் தலைமையும் லீக் தலைமையும் ஏகாதிபத்தியத்தோடு சமரசம் செய்து கொள்ளும் கொள்கையையும், யாவரையும் ஒரே அணியில் ஒன்றுதிரட்டாமல், பொதுஜன சக்தியைப் பிளவுபடுத்தும் கொள்கையையும் கடைப்பிடித்து வருகின்றன. ஆயினும்கூட, இவைகளைப் பொருட்படுத்தாமல், தொழிலாளர்களும், நகரங்களில் உள்ள சிப்பந்திகளும், கிராமங்களிலுள்ள விவசாயிகளும், பண்ணை அடிமைகளும், யதேச்சாதிகார ஆட்சியின் கீழ் புழுப்போல் துடிதுடிக்கும் சமஸ்தான மக்களும் போர்க்கொடியைத் தாழ்த்தாமல், கடந்த வருடம் மென்மேலும் வீரம் செறிந்த புரட்சிப் போராட்டத்தை நடத்திக்கொண்டேயிருந்தார்கள். போர்க்குணமும், போராட்டமும் மேலும் முறுக்கேறிக் கொண்டேயிருந்தது.

ஆசியா முழுவதும் புரட்சி

ஆசியா கண்டத்திலுள்ள அடிமை நாடுகளிலெல்லாம் யுத்தம் முடிந்தபின்பு வெடித்த சுதந்திரப்போரா

யார் சொல்லுகிறார்கள் என்பது முக்கியம் அல்ல, என்ன சொல்லுகிறார்கள் என்பதுதான் முக்கியம்.

*　　*　　*

- இருபது பக்கங்களில் உணர முடியாத விஷயங்களை இரண்டே வரிகளில் உணர்ந்து விடலாம். படிப்பதற்கும் சிரமம் இல்லை; நேரமும் சுருக்கம். விஷயத்தை சுலபமாகத் தெரிந்துகொண்டோம் என்ற மனத்திருப்தி வேறு நமக்கு உண்டாகிறது.

- இப்படி எளிதில் ரத்தினச் சுருக்கமாக விளக்கும் வார்த்தைகளைத்தான் நாம், 'பொன் மொழிகள்', 'மணி வாசகங்கள்' என்று வானளாவப் புகழ்கின்றோம்.

- திருக்குறளுக்கு ஏற்பட்ட பெருமை என்ன? பெரிய பெரிய கருத்துக்களை மிக மிகச் சுருக்கமாக இரண்டு வரிகளில் அதன் உண்மையை நமக்கு உணர்த்திவிடுகிறது. அதைப்போலவே, நம்முடைய பழம் பெருமை வாய்ந்த 'ஆத்திச்சூடி,' 'கொன்றை வேந்தன்', 'உலகநீதி', 'நல்வழி', 'மூதுரை', போன்ற நீதிநூல்கள் நமக்குப் போதிப்பதைவிட பிற நாட்டு நூல்கள் அவ்வளவாகப் போதித்து விடவில்லை; இருப்பினும் அவர்களும் என்ன சொல்லுகிறார்கள்—எப்படிச் சொல்லுகிறார்கள்? என்பதை அறிந்துகொள்ள வேண்டாமா? இது மனித இயல்புதானே.

● அந்த நோக்கம்கொண்டு இதில் பல பொன் மொழிகள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இவைகள் யாரால்-எப்பொழுது-ஏன் சொல்லப்பட்டது? என்ற விருத்தாந்தத்தைக் குறிக்க நான் விரும்பவில்லை. நமக்கு அந்த 'ஜாபிதா' தேவை இல்லை. கருத்துத்தான் முக்கியம். கருத்துக்களை உதிர்த்தவர்கள் அத்தனைபேரும் அறிஞர்கள் தான், அதில் சந்தேகமில்லை; அதோடு கருத்துக்களும் முழுக்க முழுக்க அனுபவ உண்மை. இந்த மாதிரிப் பிரசுரங்களில் எனக்கு அளவற்ற ஆசை!

● இச்சிறு நூலை அன்புடனும்—ஆர்வத்துடனும் பிரசுரிக்கும் ஸ்டார் பிரசுர அதிபர், ஆங்கிலக் கவிதை வானில் மின்னித் தமிழ் வானத்தில் பிரகாசிக்கும் புலமைமிக்க நண்பர் ஸ்ரீ வி. ஆர். எம். அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றி.

முல்லை—முத்தையா

*　　*　　*

பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற
சில சொல்லல் தேற்றாதவர். —குறள்

பொன் மொழிகள்

1

குற்றம் செய்துவிட்டால் மறைக்காதே. வெளியில் கூறு. அது நீ செய்யக்கூடிய பல குற்றங்களைத் தடுத்து விடும்.

2

உண்மைத் தோழன் நமது இன்பத்திலும் துன்பத்திலும் பங்கெடுத்துகொண்டு இன்பத்தைப் பெருக்கி துன்பத்தைப் போக்கி உதவி புரிகிறான்.

3

துணையற்ற வாழ்க்கை ஒரு வறண்ட பாலை வனம்.

நல்ல சிநேகிதன் இல்லாத ஒருவன் தன் இதயத்தையே வெட்டி விழுங்கும் அரக்கனாகின்றான். தோழர்கள்தான் கண்கண்ட தெய்வங்கள்.

4

திருமணம் என்பது தேவாலயத்தில் நடக்கும் முணு முணுப்பல்ல. இரண்டு ஆத்மாக்களின் சம்மேளனம்.

5

மனிதனுக்கு அன்புள்ள இதயமும் அமைதியுள்ள மூளையும் தேவை.

6

திறமையைக் காட்டிலும் யோக்கியதையே பலருடைய செல்வாக்குக்கு காரணமாக இருக்கிறது.

7

ஒருவருடைய கருணையைச் சம்பாதித்துக் கொண்டால் அவருடைய இதயமும், பொக்கிஷங்களும் உங்களுக்கே சொந்தமாய் விடுகின்றன.

8

ஒரு விவகாரத்தில் நாம் வெற்றி பெற்று விட்டதாக அக மகிழலாம். ஆனால் அதன் காரணமாய் நண்பனையோ ஒரு உறவினரையோ அதுமுதல் இழக்க நேரிடுகிறது.

9

நான் செய்ய வேண்டியது என்ன என்பதே என் சிந்தனை; பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றி கவலைப்படுவதில்லை.

10

செய்யப்படும் செயல்களுக்கு அர்த்தம் இருக்க வேண்டும். அர்த்தமற்றவைகளைக் கட்டிக்கொண்டு அவலப்படாதீர்கள்.

11

சில சமயங்களில் மனிதன் மிருகத்துக்குச் சமமாகிறான்.

12

மனிதனைப் பிடித்த சனியன் ஜாதி மதச் சச்சரவு. அது பேத புத்தியில் வருவன.

13

அளவுக்கு மீறிய மகிழ்ச்சியோ, துக்கமோ ஏற்பட்டால் மனிதன் தன் நிலையை மறந்தவனாகிறான்.

14

கத்தி முனையைக் காட்டி காரியம் சாதிப்பதைக் காட்டிலும், புன்னகையினால் இணங்க வைப்பது மேன்மை.

15

சமயம் நேர்ந்தால், எதிரிகளைக் காட்டிலும், நண்பர்கள் அதிகமான துரோகம் செய்ய முடியும்.

16

ஒரு தேசம் சிந்திக்கத் தொடங்கிவிடுமானால் அதன் வேகத்தை நிறுத்த யாராலும் முடியாது.

17

மனோ பலவீனம் உள்ள மனிதன் நாணல் தட்டைக்குச் சமம். அது காற்றடிக்கும் பக்கமெல்லாம் வளையும்.

18

மனிதன் தூண்டுதலுக்கு ஆளாகிவிட்டால் அவனுக்கும் விலங்குக்கும் வித்தியாசமில்லை.

19

நிர்மலமான வானத்திலே கருமுகில் தோன்றுவதைப்போல தூய வாழ்க்கையிலும், கட்பிலும் களங்கம் உண்டாகி விடுகிறது.

20

இன்பம் என எண்ணி தீமை செய்தலாகாது.

21

இராமனும் கிருஷ்ணனும் மானிடர்களாயிருந்திருக்கலாம். ஆனல் கவிஞர்கள், அவர்களை மானிட வரம்பை மீறச்செய்து அவர்களுக்குத் தெய்வத் தன்மை அளித்துவிட்டார்கள். கவி என்ருலே மானிடன்தானே, ஆகையால் அவனல் அளிக்கப்பட்ட தெய்வத் தன்மையும் சம்பூரணமானதாக இல்லை.

22

ஆண் தனிமையைப் போக்க இல்வாழ்க்கையை விரும்புகிருன்; பெண், ஒருவித இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காக மணவாழ்வை விரும்புகிருள். ஆனல் முடிவில் இருசாராரும் ஏமாற்றம் அடைகின்றனர்.

23

திருமணம் என்பது சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட விபசாரம்.

24

வறுமையினால் கூட மனிதனுக்கு வாழ்க்கை வெறுத்துப்போகாது; ஆனால் இல்லறத்தில் ஏற்படும் வறட்சியே தற்கொலை எண்ணங்களை அவன் உள்ளத்தில் தூண்டிவிடும்.

25

ஒரு பெண் என்னுடன் பேசிவிட்டால் என் உள்ளம் மகிழ்ச்சி அடைகிறது. அவள் சிரித்து விட்டாலோ என் உள்ளமும் சிரித்து விடுகிறது.

26

அன்பு, ஆதரிப்பு, பராமரிப்பு, இவையே பெண்ணுக்குரிய வேலைகளாக இருந்திருக்கின்றன. இவற்றிலே அவள் பெற்ற திறமையை, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் செயலிலும் காணலாம்.

27

அவஸ்தையும் ஆபத்தும் ஏற்படும் காலங்களில் நம்மைக் காப்பாற்றி கூடவே இருந்து பாடுபடுவோர் நமக்கு எந்தச் சமயத்திலும் விலைமதிக்க முடியாத நண்பர்களாவார்கள்.

28

பலருக்கு அவர்களுடைய சிறந்த திறமையைக் காட்டிலும் உபசார குணத்திலேயே போற்றும்படியான மேன்மை கிடைத்திருக்கிறது.

29

உடைசல் பேர்வழிக்கு உலகமும் உடைசலாகவே தென்படும்.

30

கதிரவன் தன் ஒளிக்கதிர்களை வயிரத்தின் மீதும், மண்ணாங்கட்டியின் மீதும் ஒரே மாதிரி தான் வீசுகிறான். ஆனால் வைரம் மாத்திரமே அந்தக் கதிர்களை எதிரொளி வீசுகிறது. ஆனால் மண்ணாங்கட்டியோ......?

31

எவனுடைய இதயத்தில் உண்மை பிரகாசிக்கிறதோ அவன் தான் மகான்.

32

கடவுளிடமுள்ள பயமே மதத்திற்குக் காரணம். சமூகத்திலுள்ள அச்சமே ஒழுக்கத்திற்குக் காரணம்.

33

உலகத்தில் மிகக் கஷ்டமான காரியம் எது? சிந்தனை செய்வதுதான்.

34

திருப்தியுள்ளவனே பணக்காரன். நம்பிக்கையே உறவு.

35

ஏதேனும் ஒரு விஷயத்தை ஏராளமான ஜனங்கள் நம்புகிறார்களா? அப்படியானால் அவ்வளவுக்கவ்வளவு அந்த விஷயத்தை அதிகக் கவனமாக ஆராயவேண்டும்.

36

அன்புள்ள மனிதன் வாயால் பேசாவிட்டாலும் அவன் கண்களில் அன்பு ததும்பி விடும்.

37

ஒரு வித்தையில் விருப்பம் கொண்டவன், தன்னையே அதற்குத் தியாகம் செய்யவும், அதிலேயே தன் வெகுமதியைக் காணவும் திருப்தியுடையவனாக இருக்கவேண்டும்.

38

தோல்வியடைந்த பலர் வெற்றியடைந்த கட்சியில் நியாயமிருப்பதாக உணர்வதில்லை.

39

பிறருக்கு திருப்தியையும், மகிழ்ச்சியையும் தரக்கூடிய சமயத்தை எப்பொழுதும் தவற விடக்கூடாது.

40

பலத்தால் ஆகாத காரியம் சில சமயங்களில் தந்திரங்களால் ஆகிவிடும். அதற்காக தந்திரத்தை துன்மார்க்கத்தில் உபயோகிக்கக் கூடாது.

41

விவகாரப் பேச்சு எந்த அன்பையும் உடைத்தெறிந்து எப்போதும் கெடுதலை உண்டாக்கக் கூடியது. அதனால் விபரீதம்கூட உண்டாகும்.

42

இருள், புயல், பசி, கேலி, விபத்துக்கள், தோல்விகள் அனைத்தையும் மரங்களைப்போல், விலங்குகளைப்போல் எதிர்த்துப் பொறுமை கொள்.

43

துயரங்கள் என் உடை மாற்றங்களில் ஒன்று. காயம்பட்டவனைப் பார்த்து உன் காயம் எப்படி இருக்கிறது என்று நான் கேட்பதில்லை; ஏனென்றால் நானே காயம் பட்டவனாகி விடுகிறேன்.

44

அறிவின் சிகரத்தில் நின்று போர்புரிந்து கொண்டிருப்பவர்களுக்கு, பெரும்பாலானவர்களுடைய ஆதரவு ஒருபோதும் கிடைப்பதில்லை.

45

ஆசையை அடக்கவேண்டுமானால் அதற்கு இணங்க வேண்டுவதுதான் சிறந்த வழி.

46

ஆபத்தில் வாழக்கூடிய மனோஉறுதி எவனிடத்தில் இருக்கிறதோ அவனே மகான்.

47

உயர்ந்த எண்ணங்களைக் கொண்டவர்கள் ஒருபோதும் தனித்தவர்கள் என்று கூற முடியாது.

48

காதல் புரியாமல் இருப்பதைவிட காதலில் தோல்வி அடைவதைக்கூட வரவேற்கலாம்.

49

உண்மையை நேசித்துப் பிழையை மன்னித்து விடலாம்.

50

ஒரு உண்மையைக் காண்பது அறிவினுல் மட்டும் அல்ல, அன்பினுலும் காண்கிருேம்.

51

இன்பத்திலிருந்து துன்பமும், பற்றுதலிலிருந்து பயமும் உண்டாகின்றன.

52

தீய எண்ணங் கொண்டவர்களையும், தாழ்ந்த புத்தி உள்ளவர்களையும் நண்பர்களாகக் கொள்ளாதீர்கள். தர்மவான்களை நண்பர்களாகக் கொள்ளலாம். அவர்கள்தான் இகழுக்கும் புகழுக்கும் பாத்திரமானவர்கள்.

53

பணக்காரன் என்ற காரணத்துக்காக ஒருவனை நாம் வணங்குவதில்லை.

54

என் கருத்துக்கள் உங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். இருந்தாலும், என் இதயத்திலே ஆழமாகப் பதிந்திருக்கிற விஷயங்களைத்தானே நான் சொல்ல முடியும்.

55

பெண் பூரண உண்மை அழகைப் பெறு வதைப்போல் ஆணுல் பெற முடிவதில்லை.

56

தாய்மை என்ற தத்துவம் அமையுமாறு இயற்கையிலே பெண் படைக்கப்பட்டிருக் கிருள்.

57

நீர் சொல்லும் விஷயத்தை நான் அடி யோடு வெறுக்கிறேன். ஆனல், நீர் சொல்ல உமக்குள்ள உரிமையை, என் உயிரையே வேண்டுமானுலும் கொடுத்து நான் காப் பாற்றுவேன்.

58

நம்மிடம் வந்து பழகிப் போகிறவர்களுக்கு நம்முடைய கூட்டுறவினல் ஆனந்தம் இருக்கிற தென்று அவர்கள் உணர்ந்து மகிழுமாறு பிரயாசைப்பட்டு நாம் நல்லவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.

59

ஒருவன் அறிவின் துணை கொண்டு எவ் வளவு நல்ல வழியில் போகிருனே, அதே போல் இன்னும் அதிகமாகக்கூட இச்சை களின் வழியாகவும் சென்று மயங்க முடியும்.

60

ஏழ்மையிலோ, சாமர்த்தியத்திலோ குறைவானவர்களைக் காணும்போது அவர்களை அவமதிப்பது அறிவீனம். ஏனென்ருல் நாமும் ஒரு சமயம் அவர்களைப்போல் இருந்திருப்போம்.

61

ஆண்களுக்கு, ஆண்களிடத்திலும், பெண்களுக்குப் பெண்களிடத்திலும் முதல் சந்திப்பிலே மயங்கி விடுவதோ—அன்பு தோன்றி விடுவதோ இல்லை.

62

நமக்கு ஒருவர் உதவியாக இருக்க வந்தால் அவருக்கு ஏதேனும் நம்மால் ஆகவேண்டிய காரியம் ஒன்று இருக்க வேண்டும் என்பதை தெரிந்து கொள்ளுங்கள்.

63

வெறும் நடிப்பைக்கொண்டு யாரையும் நண்பர் என்றும் அற்பக்காரணத்தால் எவரையும் பகைவர் என்றும் எண்ணிவிட வேண்டாம்.

64

அறிவைக் காட்டிலும் யுக்தி சாதுர்யம் மிகப் பெரிது.

65

ஒரு குழந்தையை ஆசீர்வதிக்கச் சென்ற ஏழைக் கவிஞர் பின்வருமாறு கூறினர்:

R4
31N49

"அறிவுள்ளவன் என்ற ஒரே காரணத்தால் நான் இந்த உலகில் பட்ட அவஸ்தைக்கு அள வில்லை. என் வறுமைகூட என் அறிவினல் ஏற்பட்டதுதான். அறிவில்லாத மக்க ளிடையே அறிவுள்ளவனுக வாழ்வது அறியா மையே ஆகும். அதனுல் எல்லையற்ற தொல்லை கள் விளைகின்றன. அறிவுள்ளவன் உலகில் முன்னேறுவது முடியாத காரியம். ஆகை யால், இந்தக் குழந்தையை அறிவில்லாத வனுகப் படைத்துவிடு, கடவுளே! இதைத் தான் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறேன். அறிவிலியாகவே வளர்ந்து, பெரியவனுகி அவன் கௌரவத்துடனும், பணத்துடனும், பதவியுடனும், பட்டத்துடனும் வாழ்வான்; தேசத்தின் பிரதம மந்திரியாகக்கூட ஆகி விடுவான்.

66

வாழ்வு என்பது ஏதோ ஒரு வாடிக்கை போல் ஆகிவிட்டது.

67

திடமுள்ளவனுக்கு ஒரு முறை சாவு, பயங்கொள்ளிக்குப் பலமுறை சாவு.

68

வேலை செய்யும் தொழிலாளிக்கு எண் ணும் சிந்தை உண்டு. களிக்கும் நகைப்பு உண்டு; கற்பனைக் கனவு உண்டு; சகிக்கும் தியாகம் உண்டு.

69

கசாப்புக் கடைக்குமேலே ஆகாயத்தில் பறக்கும் கழுகுகளும், பருந்துகளும்போல் கொள்ளைக்காரர்கள் தென்படுகிறார்கள்.

70

கோழை மனம் கொண்டோர் சிறு நஷ்டம் ஏற்பட்டாலும் முறிந்து விடுகிறார்கள்.

71

பகலின் அழகைச் சாத்தியமாக்குவதற்குத்தான் இரவு வருகிறது. வாழ்வை நிரூபிக்கவே சாவு வருகிறது.

72

அறிவு என்பது உண்மை; அறிவின் நோக்கம் பெரிது.

73

மனிதன்தான் மதத்தை உண்டு பண்ணுகிறான்; மதம் மனிதனை உண்டு பண்ணவில்லை.

74

சட்டங்கள் எல்லாம் மனிதனைத் தண்டிக்க உதவுமேயன்றி ஒழுக்கத்தைக் கற்பிக்க உதவுவதில்லை.

75

உண்மையே, மனிதனைத் தூய்மை உடையவனாகவும், துணிவுள்ளவனாகவும், சிந்திப்பவனாகவும், சீலம் உள்ளவனாகவும் ஆக்குகிறது.

76

பிறர் உங்களைப் போற்ற வேண்டும் என்பதற்காக, அவர்களின் முன்னிலையில் தருமங்களைச் செய்து பெருமை பாராட்டாதீர்கள்.

77

கோவில்களுக்குத் தினம் போய் வந்தும், சாஸ்திரங்களைத் தவறாது படித்துக்கொண்டும் இருந்தால் போதுமா? உங்களுடைய இதயத்திலிருக்கும் உண்மையான பக்தியையும், இரக்கத்தையும் அகற்றிவிடாதீர்கள்.

78

ஆசை என்பது சில சமயங்களில் அறிவை மயக்கும் திரையாகும்.

79

வாழ்க்கையில் பல தோல்விகள் நேரிடலாம். அதைக்கண்டு மனம் தளர்ந்துவிடக் கூடாது. எப்பொழுதும் ஊக்கமுள்ளவர்களாகவே இருக்க வேண்டும். எப்பொழுதேனும் அதிர்ஷ்டக் காற்று உங்கள் பக்கம் அடிக்கும்.

80

அதிர்ஷ்டத்திற்கு அஸ்திவாரம் உழைப்பு. தரித்திரத்திற்குத் தாய் சோம்பல். சோம்பல் என்பது அபிவிருத்தியுடைய விருக்ஷத்திற்கு வேர்ப்புழுவாகும்.

81

துக்கமும் நிசப்தமும் சக்தி வாய்ந்தவை. ஆனல் பொறுமை தெய்வீகத்தன்மை வாய்ந்தது.

82

அறிவு நட்பை ஒன்று படுத்தாது. மூடத்தனம் வெகு சீக்கிரத்தில் சிதைத்து விடும்.

83

சுட்ட செங்கல் உடைந்துபோனல் மறுபடியும் ஒன்று சேர்வது கடினம். அதுபோல, மிகவும் நொந்து பிரிந்த மனம் எவ்வளவுதான் ஆறுதல் செய்யப்பெற்ருலும் முன்போல் ஒற்றுமை யடைவது அரிது.

84

ஏதுமில்லாதவன் தின்னத் துணிவான்; எண்ணமற்றவன் தூங்கத் துணிவான்.

85

சக்தி பெருகுகின்றது, இடையூறுகள் வெல்லப்படுகின்றன என்ற உணர்ச்சியே இன்பமாகும்.

86

வாழ்க்கை இன்னல்களை ஒருவன் எம்மட்டும் பொறுக்கிருனே, அம்மட்டும் அவனுடைய மேன்மை ஒளிர்கின்றது.

87

எவ்வளவுக்கெவ்வளவு மூடபக்தி ஒடுங்குகின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு நல்ல நடத்தைகள் பெருகிப் பரவும்.

88

மனிதன் செய்கின்ற குற்றத்திற்கு அவன் அனுபவிக்கும் ஜீவாதார உரிமைகளே அவனுக்குப் பாதுகாப்பு அரண்களாகும்.

89

சட்டமும் குற்றமும் சகோதரர்கள் என்ருல் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்; ஆனல் அதுதான் உண்மை.

90

மனிதர்களில் பெரும்பான்மையோர் பிதற்றிக் கையாண்டுவரும் அறநெறிகள், கியாதிபெற்ற மருந்துக்குச் சமமானவை. அதாவது, அவ்விரண்டிலும் முறைமை அல்லது ஒழுங்கு இல்லை; மெய்யான நற்பயன் உண்டாவதில்லை.

91

தன்னம்பிக்கை இல்லாத மனிதனும் கடையாணி இல்லாத வண்டியும் ஒன்றே.

92

கரும்பைச் சுவைத்தவன் கணுவைத் தூற்றிக் கொண்டிருக்கமாட்டான்.

93

சிறந்த காரியம் மூன்று: ரகஸ்யத்தை ரகஸ்யமாக வைத்துக் கொள்வது; காலத்தை ஒழுங்காகச் செலவழிப்பது; துன்பத்தைச் சகித்துக் கொள்வது.

94

இன்பம் தந்து அன்பைக் கொள்ளை கொண்ட பொருளிலே மாசு என்ற மாயை மறைந்துவிடும்.

95

தனக்கென ஏற்பட்ட வாழ்நாட்களை வீணாகக் கழித்துவிட அறிவுள்ள எவனும் விரும்பமாட்டான்.

96

அறியாமை ஆபத்தானது; முடிவற்ற சிந்தனையோ அதனினும் ஆபத்தானது.

97

உண்மைக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்யுங்கள்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்யாதீர்கள்.

98

திருமணம் என்பது ஆண் பெண் உடன் படிக்கை மட்டும் அல்ல; அது ஒரு சமுதாய ஒப்பந்தம்; பொருளாதாரப் பங்கீடு.

99

யோக்கியர்களாக இருப்பவர்களில் மூன்று வகை: பாபம் என்று பயந்து ஒரு காரியத்தைச் செய்யாமல் இருப்பவர்கள் ஒருவகை; பிறர் பழிப்பார்களே என்று எண்ணி ஒரு காரியத்தைச் செய்யாமல் இருப்பவர்கள் ஒரு வகை; சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தால் கெட்டுப்போகாமல் இருப்பவர்கள் ஒருவகை.

100

யார் சொல்லுகிருர்கள் என்பது முக்கிய மல்ல; என்ன சொல்லுகிருர்கள் என்பது தான் முக்கியம்.

101

பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை; அதற்காக உண்மையை எல்லோரிடமும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டாம். ஏனெனில் உண்மையைக் கண்டு மிரளுபவர்களும் உண்டு.

102

குணசாலிகள் தனவந்தர்களா யிருந்தால் மெருகிடப்பெற்ற தங்கத்தைப்போல் மதிப்பைப் பெறுவார்கள்.

103

தைரியஸ்தர்களைச் சிறையில் தேடவேண்டும்; கோழைகளைக் கோவிலில் தேடலாம்.

104

காலமும் தூரமும் அன்பைத் தடை செய்வதில்லை.

105

கடலில் வலையை வீசினல் மேலிருக்கும் மீன் அகப்படுமேயன்றி அடியிலிருக்கும் முத்து அகப்படுவதில்லை. எவ்வளவுதான் முயன்ருலும் சிலருடைய வெளித் தோற்றத்தைப் புரிந்து கொள்ளலாமே தவிர, அவர்களின் உள்ளத்தில் பதிந்துள்ள உண்மைக் கருத்தை உணர்ந்துகொள்ள முடிவதில்லை.

106

அயோக்கியத்தனத்தை எவனெருவன் பகிரங்கமாகச் செய்கிருனே அவன்தான் உண்மையான யோக்கியன்.

107

ஒவ்வொரு நாளும் அறிவுத் திறமையில் வளர்ந்துகொண்டு வருகிற மனிதனைப் பற்றித் தான் நான் கவலைப்படுகிறதே தவிர, மற்றவர்களைப்பற்றி நான் கவலை கொள்வதில்லை.

108

வறுமையிலும், காதல் பித்தத்திலும், வணக்கத்திலும், சிந்தனையிலும் ஆழ்ந்தவர்களுக்கு இரவு பகல் தூக்கம் ஏது ?

109

உன்னுடைய வேலைத் திட்டங்களைப் பிறருக்கு முதலில் வெளிப்படுத்தி விடாதே! ஏனெனில் அவை ஒருவேளை நிறைவேறாமல் போனால் அதனால் உன்னைப் பார்த்துப் பலரும் எள்ளி நகையாடுவர்.

110

அழகோடு ஆனந்தம் வரும். இருளோடு துயரத்தின் சாகை வரும்.

111

அறிவை விலைக்கு வாங்கமுடியும்; ஆனால் அன்பு உணர்ச்சி ஒருநாளும் சந்தைக்கு வருவதில்லை.

112

நாம் யாருமே தவறு செய்யக்கூடாதவர்கள் அல்ல; நாம் தேர்ந்தெடுக்கும் சமயத்திலுள்ள விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு, நம் சக்திக்கேற்ற அளவுக்குப் புத்திசாலித்தனமாகவும், உண்மையாகவும் தேர்ந்தெடுக்கத்தான் நம்மால் இயலும்; பின்னால் வேறு விதமாக மாறிவிட்டால் அதற்காக நாம் வருத்தப்பட வேண்டியதில்லை.

113

உண்மைக் குணம் பூரணமாக உள்ளவர்களிடம் கள்ளங் கபடமாக எண்ணங்களைக் காணமுடியாது.

114

அடக்க முடியாத உணர்ச்சி வேகம் ஆபத்தை உண்டாக்கிவிடும்.

115

மனிதனுடைய வாழ்க்கை அன்பையும் தியாகத்தையுமே அடிப்படையாகத் திகழ வேண்டும். இந்த வாழ்வுதான் இனிமையைத் தரும்.

116

உலகத்தை வெறுப்பவர்கள் எண்ணிக்கை கொஞ்சம். ஆனல் மரணத்தை விரும்புபவர்கள் தொகை அதனிலும் கொஞ்சம்தான்.

117

ஏழையின் ஆசைக்கு எல்லை உண்டு. பணக்காரனின் ஆசைக்கு எல்லை ஏது?

118

தண்ணீரில் கரைந்த விஷமும் பெண்ணின் உள்ளத்தில் உறைந்துள்ள வஞ்சமும் வெளிக்குப் புலப்படுவதில்லை.

119

கணவனுக்கு இசைந்து நடக்கும் மனைவி தான் அந்த வீட்டில் உண்மையான அதிகாரம் வகிக்கிருள்.

120

மனித வாழ்க்கையில் இன்பத்தையும், திருப்தியையும், ஆறுதலையும் தருவது நட்பு.

121

இரும்பு மிக உறுதி வாய்ந்ததுதான், என்றாலும் காந்தத்தின் முன்னால் அதன் சக்தி யெல்லாம் குன்றிவிடுகிறது. காந்தம் கவர இரும்பு ஓடி வருகிறது. அதுபோல், காதலி யின் காந்த சக்தி காதலனின் இரும்பு நெஞ் சத்தை இளக்கி விடுகிறது.

122

கணவன் எதைச் செய்தாலும் அவனு டைய அன்பை அலட்சியம் செய்கிற மௌடீ கம் பல பெண்களிடம் உண்டு; அந்த அன்பை இழந்த பிறகு வாழ்வது வெறும் கேலிக் கூத் தாகும்.

123

வாழ்வதைக் காட்டிலும் சாவதில்தான் இன்பம் அதிகம் இருக்கிறது; எனினும் மனி தன் வாழத்தான் விரும்புகிறான்.

124

முட்டாளால் ஒரு குடும்பத்துக்கு கெடுதல் இல்லை. அறிவுள்ளவனால் குடும்பத்துக்கு அதிகமான கெடுதல் ஏற்படுகிறது.

125

அதிர்ஷ்டம் என்பது சுழலும் சக்கரத்தைப் போன்றது.

126

அன்பு கனிந்த மனைவியும், திடமான ஆரோக்கியமுமே ஒரு மனிதனின் மிகச் சிறந்த மூலதனம்.

127

மன்னிப்பதில் இன்பம் இருக்கிறது. பழி வாங்குவதில் இன்பம் இல்லை.

128

உங்களின் உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் நஞ்சென ஒதுக்கித் தள்ளுங்கள்.

129

சுகம் என்ற வெள்ளப் பெருக்கு, துக்கம் என்ற கடலில் போய்த்தான் முடிவடைகிறது.

130

"கடவுளுக்குக் காது கேட்கவில்லையா? கண்ணில்லையா!" என்று நிந்தனை செய்கின்றனர், கண்ணையும், காதையும் கொடுத்த கடவுளுக்கு பார்க்கவும் கேட்கவும் தெரியாதென்றால் அதைக் காட்டிலும் விந்தை வேறு உண்டா?

131

புன்சிரிப்புத் தவழாத முகமானது மலராத மொக்குக்குச் சமமானது.

132

அழகும் அன்பும் தோன்றி மறைவதென்ருல், பருவத்தின் புஷ்பங்கள் மலர்ந்து உதிர்வதென்ருல் வாழ்க்கைக்கு அர்த்தம் உண்டா?

133

சௌந்தர்யமே, சாவைத்தான் நினைப்பூட்டுகிறது.

134

உன் மனைவி வெளிப்பார்வைக்கு நலிந்தவள்போல காணப்படலாம். ஆனல் உள்ளுக்குள்ளே அவள் அடையும் ஆனந்தத்தை உன்னல் அறிந்துகொள்ள முடியுமா?

135

உத்தமமான தர்மத்தை எந்த ஜாதியாரிடத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

136

வேற்றுமைகள் பாராட்டுவதாலேயே எல்லாத் துன்பங்களும் விளைகின்றன.

137

நன்மை செய்வதற்கு, பிறரைத் தூஷித்தல் தக்க வழியல்ல.

138

எந்தக் குற்றத்தையும் செய்துவிட்டு, புண்ய ஸ்தலங்களுக்குப் போய்வந்தால் பாவங்கள் எல்லாம் மறைந்து விடும் என்பது முட்டாள்தனம்.

139

பணமா மனிதனைச் சம்பாதிக்கிறது; மனிதனல்லவா பணத்தைச் சம்பாதிக்கிறான்.

140

துக்கத்திற்கு முக்கிய காரணம் பயம்.

141

உண்மையில் நன்மையும் தீமையும் ஒன்றே; அவை நம் மனத்திலேயே இருக்கிறது.

142

உத்தம நண்பர்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் அவர்களுடைய விசுவாசம் ஒரு போதும் கெடாது.

143

மக்கள் நல்வாழ்வு நடத்தத் துணை செய்ய நாடு முழுவதும் வீடுகள் தோறும் - தெருக்கள் தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

144

தெரியாத அபாயத்தைவிட தெரிந்துள்ள தொந்தரவு சகித்துக் கொள்ளக் கூடியது என நினைப்பது மனித இயல்பு.